வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந,க.எண். 4312/ஆ4/2022 நாள் : .01.2023

பொருள் : தேர்வுகள் –2022–2023 ஆம் கல்வியாண்டு –மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு –இடைநின்ற மாணவர்கள் தனித்தேர்வர்களாக விண்ணபித்துள்ளமை –பள்ளி மாணவராக தேர்வெழுதுதல் – சென்னை – அரசு தேர்வுகள் இயக்குநரின் அறிவுரைகள் –பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு –தெரிவித்தல் –சார்பு

பார்வை : சென்னை அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.நாள் 06.01.2023

-----

மேற்காணும் பொருள் சார்பாக 2021–2022 கல்வியாண்டில் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வினை பள்ளி மாணவராக, செய்முறைத் தேர்வு உள்ள பாடத் தொகுதிகளில் பயின்று தேர்வெழுதிய மாணவர்களுள் சிலர், தொடர்ந்து மேல்நிலை இரண்டாமாண்டு பயிலாமல் மாற்றுச் சான்றிதழ் பெற்று இடைநிறுத்தம் செய்துள்ளதாக தெரிவித்து பெயர் பட்டியலில் இருந்து தலைமை ஆசிரியர்களால் நீக்கம் செய்யப்பட்டது. ஆனால் சில மாணவர்கள் தற்போது மார்ச்/ஏப்ரல் –2023 நடைபெறவிருக்கும் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்விற்கு அவர்கள் பயின்ற பாடத் தொகுதியிலேயே தனிதேர்வர்களாக விண்ணபித்துள்ளதாக பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இணைப்பில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து மேல்நிலைபள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் முதல்வர்கள் கேர்ட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒப்பம்) க. முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

அனைத்துவகை மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்.

நகல்:–

மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை /தனியார்), வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவுடம தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது,